செ.வெ.எண்: 949/2017 நாள்: 10.12.2017

**ஒகி புயல் காரணமாக காணாமல் போன மீனவர்களை தேடும் பணியில்
கடலோர காவற்படையினருடன் சேர்ந்து
சின்னத்துறை, தூத்தூர் மீனவர் கிராமங்களை சேர்ந்த
மீனவர்களும் ஈடுபட்டுள்ளனர்**

கன்னியாகுமரி மாவட்டம் அரசு சுற்றுலா மாளிகையில் இன்று (10.12.2017) மாண்புமிகு மத்திய நிதி மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் திரு.பொன்.இராதாகிருஷ்ணன் அவர்கள் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுசீரமைப்பு பணிகளை விரைந்து மேற்கொள்வது தொடர்பாக மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் தகவல் தொழில் நுட்பத்துறை முதன்மைச்செயலாளருமான திரு.டி.கே.ராமச்சந்திரன் இ.ஆ.ப., கூடுதல் கண்காணிப்பு அலுவலரும் தொழில்துறை முதன்மைச் செயலாளருமான முனைவர் ராஜேந்திரகுமார் இ.ஆ.ப., வேளாண்மைத்துறை முதன்மைச் செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் திருமதி ஜோதி நிர்மலாசாமி இ.ஆ.ப., மீன்வளத்துறை இயக்குநர் திரு.வி.பி.தண்டபாணி இ.ஆ.ப., மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டார்.

அப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீரமைப்பு பணிகள் குறித்து கண்காணிப்பு அலுவலர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆலோசனையின்போது, மாண்புமிகு மத்திய நிதி மற்றும் கப்பல் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் அவர்கள், புயலினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், மீனவர்கள் மற்றும் மலைவாழ் மக்களின் வாழ்வாதாரங்கள் மேம்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள கேட்டுக்கொண்டார்.

காணாமல் போன மீனவர்களை தேடும் பணியில் கடலோர காவல்படையினருடன் சேர்ந்து சின்னத்துறை மீனவ கிராமத்தை சார்ந்த 5 மீனவர்களும் மற்றும் தூத்தூர் கிராமத்தை சார்ந்த 2 மீனவர்களும் தீவுபகுதிகளில் தேடும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த மீனவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் மீன்பிடிக்கும் போது தங்கும் தீவு பகுதிகள் குறித்த விவரங்கள் தெரியும் என்பதால் அப்பகுதி மீனவர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் தொடர்பாக மத்திய அரசின் உள்துறை அமைச்சரகம், இரப்பர் கழகம் போன்ற சம்பந்தப்பட்ட துறைகளுடன் தொடர்பு கொண்டு, தேவையான உதவிகளும், நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**